CNR NO: TNTH13-004970-2021

நீதித்துறை நடுவர் நீதிமன்றம், போடிநாயக்கனூர்.

முன்னிலை : திரு.M.நல்லகண்ணன், B.Com., B.L.,
நீதித்துறை நடுவர், போடிநாயக்கனூர்.

2026-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 07-ஆம் நாள் வெள்ளிக்கிழமை

சுருக்குமுறை விசாரணை வழக்கு எண்: 274/2021

லோகேந்திரன் ..... புகார்தாரர்

/ எதிர் /

அன்புகீதன் ..... எதிரி

வழக்கின் சுருக்கம்

<table>
<tr><th>வ. எண்</th><th colspan="2">விவரம்</th></tr>
<tr><td rowspan="2">1.</td><td colspan="2">இருதரப்பினர்களின் பெயர்கள்</td></tr>
<tr><td>புகார்தாரர்:
லோகேந்திரன் (45/2026),
த/பெ.ஒச்சாத்தேவர்,
389, கிழக்குத்தெரு,
B.அணைக்கரைப்பட்டி,
போடிநாயக்கனூர் தாலுகா,
தேனி மாவட்டம்.</td><td>எதிரி:
அன்புகீதன் (49/2026),
த/பெ.முத்துமனோகரன்,
11-வது வார்டு,
சோலை சொக்கலிங்கம் நகர்,
போடிநாயக்கனூர்,
போடிநாயக்கனூர் தாலுகா,
தேனி மாவட்டம்.</td></tr>
</table>

CNR NO: TNTH13-004970-2021

<table>
<tr><td>2.</td><td>எதிரியின் வயது</td><td colspan="3">49/2026.</td></tr>
<tr><td>3.</td><td>தந்தை/கணவர் பெயர்</td><td colspan="3">த/பெ.முத்துமனோகரன்.</td></tr>
<tr><td>4.</td><td>மதம்</td><td colspan="3">இந்து.</td></tr>
<tr><td>5.</td><td>தொழில்</td><td colspan="3">–.</td></tr>
<tr><td>6.</td><td>முகவரி</td><td colspan="3">11-வது வார்டு, சோலை சொக்கலிங்கம் நகர், போடிநாயக்கனூர்.</td></tr>
<tr><td>7.</td><td>தாலுகா, மாவட்டம்</td><td colspan="3">போடிநாயக்கனூர், தேனி.</td></tr>
<tr><td>8.</td><td>சம்பவம் நிகழ்ந்த நாள்</td><td colspan="3">பொருந்தாது.</td></tr>
<tr><td>9.</td><td>கைது</td><td colspan="3">––</td></tr>
<tr><td>10.</td><td>பிணையில் விடுவித்தல்</td><td colspan="3">––</td></tr>
<tr><td>11.</td><td>எதிரி சிறையில் இருந்த நாட்கள்</td><td colspan="3">––</td></tr>
<tr><td>12.</td><td>புகார் தாக்கல் செய்யப்பட்ட நாள்</td><td colspan="3">27.10.2021.</td></tr>
<tr><td>13.</td><td>கோப்பிற்கு எடுக்கப்பட்ட தேதி</td><td colspan="3">23.11.2021.</td></tr>
<tr><td>14.</td><td>அழைப்பாணையுடன் நகல் வழங்கப்பட்ட தேதி</td><td colspan="3">30.12.2021.</td></tr>
<tr><td>15.</td><td>கு.வி.மு.ச பிரிவு 251-ன் கீழ் கேள்வி கேட்கப்பட்ட நாள்</td><td colspan="3">10.01.2023.</td></tr>
<tr><td>16.</td><td>விசாரணை துவக்கம்</td><td colspan="3">24.02.2023.</td></tr>
<tr><td rowspan="3">17.</td><td rowspan="3">சாட்சிகள் விசாரிக்கப்பட்ட நாள்</td><td>Witness</td><td>Chief</td><td>Cross</td></tr>
<tr><td>PW1</td><td>25.10.2025</td><td>06.03.2026</td></tr>
<tr><td>DW1</td><td>23.06.2026</td><td>17.07.2026</td></tr>
<tr><td>18.</td><td>விசாரணை முடிவு</td><td colspan="3">12.06.2026.</td></tr>
<tr><td>19.</td><td>கு.வி.மு.ச பிரிவு 313(1)(b)-ன் கீழ் கேள்வி கேட்கப்பட்ட நாள்</td><td colspan="3">06.02.2026.</td></tr>
</table>

CNR NO: TNTH13-004970-2021

<table>
<tr><td rowspan="7">20.</td><td rowspan="7">பிற மனுக்கள் மற்றும் அதன் முடிவுகள்</td><td>Date</td><td>U/s</td><td>Cr.M.P. No.</td><td>Result</td></tr>
<tr><td>10.01.2024</td><td>446/ 446(A) of Cr.P.C</td><td>402/2024</td><td>Allowed</td></tr>
<tr><td>06.02.2026</td><td>311 of Cr.P.C</td><td>389/2026</td><td>Allowed</td></tr>
<tr><td>06.02.2026</td><td>145(2) of NI Act</td><td>390/2026</td><td>Allowed</td></tr>
<tr><td>23.05.2026</td><td>315 of Cr.P.C</td><td>1188/2026</td><td>Allowed</td></tr>
<tr><td>23.06.2026</td><td>Re-Open Petition</td><td>1556/2026</td><td>Allowed</td></tr>
<tr><td>23.06.2026</td><td>311 of Cr.P.C</td><td>1557/2026</td><td>Allowed</td></tr>
<tr><td>21.</td><td>தீர்ப்பு விவரம்</td><td colspan="4">தண்டனை.</td></tr>
<tr><td>22.</td><td>தீர்ப்புரை நகலை வழங்குதல்</td><td colspan="4">வழங்கப்பட்டது.</td></tr>
<tr><td>23.</td><td>தலைமறைவாக இருந்த எதிரியின் விவரங்கள்</td><td colspan="4">05.07.2022 முதல் 29.12.2022 வரை – எதிரி மீது பிடிகட்டளை நிலுவையில் இருந்தது.</td></tr>
<tr><td>24.</td><td>மேல் நீதிமன்றத்தின் தடை மற்றும் அதன் முடிவு</td><td colspan="4">இல்லை.</td></tr>
<tr><td>25.</td><td>பாதிக்கப்பட்ட நபருக்கு இழப்பீட்டிற்கான உத்தரவு</td><td colspan="4">வழங்கப்பட்டுள்ளது.</td></tr>
<tr><td>26.</td><td>காலதாமதத்திற்கான காரணம்</td><td colspan="4">2025-ஆம் வருடத்தில்தான் புகார்தாரர் தரப்பு சாட்சி விசாரணை செய்யப்பட்டதும், புகார்தாரர் தரப்பு சாட்சியை எதிரி தரப்பில் காலதாமதமாக குறுக்கு விசாரணை செய்ததும், எதிரி தரப்பு சாட்சியை காலதாமதமாக விசாரணை செய்ததும் மற்றும் 05.07.2022 முதல் 29.12.2022 வரை எதிரி மீது பிடிகட்டளை நிலுவையில் இருந்ததும்.</td></tr>
</table>

*****

இவ்வழக்கு 23.11.2021 அன்று இந்நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இறுதியாக 24.07.2026 அன்று விசாரணைக்கு வந்தபோது, புகார்தாரர் தரப்பில் வழக்குரைஞர் திரு.M.மல்லீஸ்வரன் அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் வழக்குரைஞர் திரு.S.கனி அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பிலும் எடுத்துரைத்த வாதுரைகளை கேட்டு, வழக்காவணங்களை பரிசீலனை செய்து, இதுநாள்வரை இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்.....

<u>தீர்ப்புரை</u>

1). இவ்வழக்கானது புகார்தாரர் சார்பில் மாற்றுமுறை ஆவணச்சட்டம் 1881 பிரிவுகள் 138 மற்றும் 142-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டு, கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது.

2). **<u>மனுவின் சுருக்கம்</u>**:

2.1). எதிரி, புகார்தாரரிடம் கடந்த 17.06.2021 அன்று ரூ.8,00,000/-த்தை கடனாகப் பெற்றுக்கொண்டதாகவும், பின்னர் எதிரி 01.09.2021 அன்று மேற்படி கடனிற்கு ஆதரவாக 02.09.2021 என பின் தேதியிட்டு போடிநாயக்கனூர் கிளையின், Syndicate Bank வங்கியின் 425618 என்ற எண் கொண்ட காசோலை ஒன்றை ரூ.8,00,000/-த்திற்கு எழுதிக் கொண்டு வந்திருந்ததை புகார்தாரரிடம் கொடுத்ததாகவும், பின்னர் எதிரி உறுதியளித்ததன்பேரில், மேற்படி காசோலையைப் பணமாக்கும் பொருட்டு புகார்தாரர் கணக்கு வைத்திருக்கும் Karur Vaysya Bank, போடிநாயக்கனூர் கிளையில் 22.09.2021 அன்று வசூலுக்குச் செலுத்தியபோது, எதிரியின் வங்கி கணக்கில் “BANK CD 025 EXC WEF 010721” (Bank Code 025 Excluded With Effect From 01.07.2021) என்ற காரணத்தினால் காசோலையானது 23.09.2021 அன்று திருப்பப்பட்டுவிட்டதாகவும், மேற்படி

காசோலைக்குரிய தொகையைக் கேட்டு 01.10.2021 அன்று எதிரியின் வீட்டிற்கும், எதிரி தொழில் செய்யும் முகவரிக்கும் புகார்தாரர் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை எதிரி 04.10.2021 அன்று பெற்றுக்கொண்டு, பொய்யான சங்கதிகளைக் கூறி எதிரி 09.10.2021 அன்று புகார்தாரருக்கு ஒரு பதிலறிவிப்பு அனுப்பியதாகவும், மேலும், எதிரி காசோலைக்குரிய தொகையைத் திருப்பிச் செலுத்தாமல் புகார்தாரருக்கு இக்காசோலையை வழங்கி ஏமாற்றியுள்ளார் என்றும்,

2.2). எனவே, எதிரியின் செய்கையானது மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138-ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றமாகும் என்றும், எனவே, புகார்தாரருக்கு ஏற்பட்ட இழப்புக்கு எதிரிக்கு தண்டனை வழங்கி உரிய இழப்பீட்டை எதிரியிடமிருந்து பெற்றுத்தர வேண்டி புகார்தாரர் மனுத் தாக்கல் செய்துள்ளார்.

3). எதிரிக்கு அழைப்பாணையுடன் நகல்கள் இலவசமாக வழங்கப்பட்டு, அழைப்பாணை சார்வு செய்யப்பட்டு, எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானபோது, எதிரி மீது மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138-ன் கீழான குற்றத்தின் சாரம்சம் குறித்து 10.01.2023-ஆம் தேதி விளக்கி கூறி வினவியபோது, எதிரி பொய் வழக்கு என்று கூறியுள்ளார். எனவே, புகார்தாரர் தரப்பு சாட்சிய விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4). <u>**புகார்தாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்**</u>:–

புகார்தாரர் தரப்பு சாட்சிகளை விசாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு, புகார்தாரர் லோகேந்திரன் என்பவர் ம.சா.1 சாட்சியாக விசாரிக்கப்பட்டு, ம.சா.1–ன் மூலமாக ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.5 வரையான சான்றாவணங்களும் குறியிடப்பட்டுள்ளன.

5). புகார்தாரர் தரப்பு சாட்சியத்தில் எதிரிக்கு பாதகமாக உள்ள அம்சங்களை தொகுத்து 06.02.2026-ஆம் தேதி கு.வி.மு.ச பிரிவு 313(1)(b)-ன் கீழ் வினவியபோது, புகார்தாரர் தரப்பு சாட்சியத்தை பொய் வழக்கு என்றும், தான் பணம் வாங்கவில்லை என்றும், தனது தரப்பில் விசாரிக்க சாட்சி உண்டு என்றும் கூறினார். எனவே, எதிரி தரப்பு சாட்சிய விசாரணைக்கு வாய்ப்பு வழங்கப்பட்டு, எதிரி தரப்பு சாட்சிய விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

6). **<u>எதிரி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>**:–

எதிரி தரப்பில் எதிரி அன்புகீதன் என்பவர் எ.சா.1 சாட்சியாக விசாரிக்கப்பட்டு, எ.சா.1–ன் மூலமாக சான்றாவணங்கள் எதுவும் குறியிடப்படவில்லை.

7). இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

<u>8). **தீர்வுக்குரிய பிரச்சனை**</u>:

8.1). இவ்வழக்கில் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள மாற்றுமுறை ஆவணங்கள் சட்டம் பிரிவு 138-ன் கீழான குற்றச்சாட்டானது புகார்தாரர் தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதா?

8.2). மனுவில் கோரியுள்ள இழப்பீட்டுத் தொகை புகார்தாரருக்கு கிடைக்கத்தக்கதா? என்பதே தீர்வுக்குரிய பிரச்சனையாகும்.

9). **தீர்வும் அதன் காரணமும்**

9.1). வழக்கு காசோலை எதிரியின் வங்கிக் கணக்கிற்குரிய காசோலைதான் என்பது எதிரி தரப்பில் மறுக்கப்படவில்லை. மேலும், ம.சா.ஆ.1 வழக்கு காசோலையானது 22.09.2021-ஆம் தேதியிடப்பட்டுள்ள நிலையில், மேற்படி காசோலையை புகார்தாரர் தான் கணக்கு வைத்துள்ள போடிநாயக்கனூர் கிளை, கரூர் வைஸ்யா வங்கியில் வசூலுக்குச் செலுத்தியுள்ளார் என்பதும், மேற்படி காசேலையானது 23.09.2021-ஆம் தேதியில் எதிரியின் வங்கி கணக்கில் உள்ள காசோலைகள் வேறு வங்கி கணக்கில் இணைக்கப்பட்டுள்ள காரணத்தால் அந்த காசோலை செல்லாது என்ற குறிப்புடன் திரும்பியுள்ளது என்பதை ம.சா.ஆ.1 மற்றும் ம.சா.ஆ.2 வரையான ஆவணங்களின் மூலம் அறிய முடிகிறது.

9.2). காசோலை திருப்பப்பட்டவுடன் எதிரிக்கு வழக்கறிஞரின் அறிவிப்பு சட்ட முறையான காலத்தில் சார்பு செய்யப்பட்டுள்ளதா? என்பது குறித்துப் பரிசீலனை செய்கையில், ம.சா.ஆ.3 வழக்கறிஞர் அறிவிப்பானது 01.10.2021-ஆம் தேதி புகார்தாரரால் அனுப்பப்பட்டுள்ளது என்பதும், அதனை எதிரி 04.10.2021-ஆம் தேதி பெற்றுக் கொண்டுள்ளார் என்பதையும் ம.சா.ஆ.3 மற்றும் ம.சா.ஆ.4 வரையான ஆவணங்கள் வாயிலாக அறிய முடிகிறது. எனவே, புகார்தாரர் சட்டமுறையான காலத்தில் சட்ட அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்பதையும், அதனை எதிரி பெற்றுக்கொண்டுள்ளார் என்பதையும் மேற்படி சான்றாவணங்களின் வாயிலாகப் புகார்தாரர் தரப்பு நிரூபித்துள்ளது என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது.

9.3). மேலும், வழக்கு ஆவணங்களைப் பரிசீலனை செய்கையில், வழக்கானது 27.10.2021-ஆம் தேதி தாக்கல் செய்யப்பட்டு, இந்நீதிமன்றத்தால் 23.11.2021-ஆம் தேதி முறையாக கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. எனவே, வழக்கானது உரிய காலத்திற்குள் புகார்தாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக இந்த நீதிமன்றம் கருதுகிறது. வழக்கு

காசோலையானது எதிரி, புகார்தாரருக்கு கொடுக்க வேண்டிய சட்டப்படியான கடனிலிருந்து விடுபடக் கொடுக்கப்பட்டதா? என்பது குறித்து பரிசீலனை செய்கையில், எதிரி காசோலையையும், அதிலுள்ள கையொப்பத்தையும் மறுக்கவில்லை. மேலும், எதிரியை கு.வி.மு.ச பிரிவு 251-ன் கீழ் வினவியபோது, எதிரி பொய் வழக்கு என்று மட்டுமே கூறியுள்ளார். மேலும், எதிரியை கு.வி.மு.ச பிரிவு 313(1)(b)-ன் கீழ் வினவியபோது, எதிரி பொய் வழக்கு என்றும், தான் பணம் வாங்கவில்லை என்றும், தனது தரப்பில் விசாரிக்க சாட்சி உண்டு என்றும் குறிப்பிட்டுள்ளாரே தவிர, வழக்கு காசோலையில் உள்ள கையொப்பம் தன்னுடையதல்ல என எதிரி மறுக்கவில்லை. எனவே, மாற்றுமுறை ஆவணச் சட்டப்பிரிவு 118 மற்றும் 139-ன் கீழான சட்டப்படியான அனுமானம் புகார்தாரருக்கு ஆதரவாக எழுகிறது என்று இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

9.4). மேற்படி சட்டப்பூர்வமான அனுமானத்தை மறுத்துரைக்கும் வகையில், எதிரி தனது தரப்பு வழக்கை நிரூபணம் செய்ய நேரடியாக சாட்சிகளை முன்னிலைப்படுத்த வேண்டியதில்லை. மாறாக வழக்கை இதர சாட்சிய, சான்றாவணங்கள் வாயிலாகவோ, அல்லது சூழ்நிலை, சந்தர்ப்பத்தின் வாயிலாகவோ மறுத்துரைக்கலாம் என்று மாண்பமை உச்ச நீதிமன்றம் பல்வேறு முன் வழக்குகளில் வழிவகை செய்துள்ளது. எதிரி தரப்பில் புகார்தாரருக்கு ஆதரவான அனுமானம் மறுக்கப்பட்டுள்ளதா? என்பது குறித்துப் பரிசீலனை செய்கையில்,

9.5). புகார்தாரரான ம.சா.1 லோகேந்திரன் என்பவரது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில், "**காசோலை பணம் இல்லை என்றோ, அக்கவுண்ட் பிளாக்டு என்றோ குறிப்பிட்டு திருப்பப்படவில்லை என்றால், பணம் இல்லை என்றுதான் திருப்பப்பட்டு வந்தது. நான் தாக்கல் செய்த ரிட்டன் மெமோவில் எதிரி பணமில்லாமல் காசோலையை கொடுத்து மோசடி செய்து விட்டதாக எதுவும் குறிப்பிடவில்லை என்றால், சரியல்ல. இந்த வழக்கு காசோலையானது 01.07.2021-ஆம் தேதி, சிண்டிகேட் வங்கி கனரா**

வங்கியுடன் சேர்ந்து விட்டது என்றுதான் காசோலை திருப்பப்பட்டது என்றால், சரியல்ல. ம.சா.ஆ.2-ல் குறிப்பிடப்பட்டுள்ள காரணம் எதிரி காசோலை மோசடி செய்ததாக எடுத்துக்கொள்ள இயலாது என்றால், சரியல்ல" என சாட்சியம் அளித்துள்ளார்.

9.6). அதாவது, ம.சா.ஆ.2 வங்கி ரிட்டன் மெமோவில், சிண்டிகேட் வங்கி கனரா வங்கியுடன் இணைக்கப்பட்டு விட்டதால், சிண்டிகேட் வங்கிக்கு கொடுத்த காசோலை 01.07.2021-ஆம் தேதிக்கு பிறகு செல்லுபடி ஆகாது எனச் சொல்லித்தான் திருப்பப்பட்டுள்ளது எனவும், எனவே, அது வங்கி நடைமுறைகளால் திருப்பப்பட்டுள்ளது எனவும், எதிரியின் தவறால் திருப்பப்படவில்லை எனவும், எனவே, மாற்றுமுறை ஆவணச் சட்டத்தின் கீழ் அதனை குற்றம் என கருத இயலாது என்று எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளது.

9.7). மேலும், இது குறித்து பரிசீலனை செய்கையில், இதே காரணங்களைச் சொல்லி மாண்பமை டெல்லி உயர் நீதிமன்றத்தில் அந்த வழக்கின் எதிரியால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என தாக்கல் செய்யப்பட்டு, அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்படாமல் வழக்கை பின்வரும் காரணங்களுக்காக மேல் நடத்த வேண்டும் எனச் சொல்லி உத்தரவிடப்பட்டது. அந்த வழக்கு **Sh Premanand Prusty vs Smt Sita Devi on 17 November, 2023 in CRL.M.C. 1566/2023, CRL.M.A. 5958/2023 & 12000/2023 dated 17.11.2023 in paragraph Nos. 11, 12, 15 and 16-ல்**,

11. Now, it is the case of petitioner that Syndicate Bank had merged with Canara Bank on 01.04.2020 and therefore, cheques issued by Syndicate Bank had become invalid with effect from 01.07.2021 as per the notice issued by Canara Bank and hence, on the alleged date of issuance of Cheque in question, i.e. on 28.02.2022, the cheque was not a valid cheque and its non-encashment Could not fall under Section 138 of NI Act.

12. However, it is important to consider that the petitioner has not denied his signatures on

either The cheque in question or on the promissory notes or undertakings, before the learned Trial Court. This clearly reflects, prima facie, that the cheque in question was issued towards discharge of legally Enforceable debt.

15. In this regard, this Court finds merit in the contention of the learned counsel for the complainant That even if the cheque was not encashed and had returned unpaid for the reasons that Bank was not Accepting the MICR Code, the petitioner after receipt of legal notice could have made the payment to The complainant or could have issued a fresh cheque towards the discharge of his liability. The fact Remains that the cheque in question, which has been undisputedly signed by the petitioner, was Presented for encashment with the Bank by the complainant towards discharge of debt, which the Complainant claims is reflected from the promissory notes and undertakings signed by the Petitioner, and upon its presentation, the cheque had been returned unpaid by the Bank to the Complainant. Thereafter, the petitioner had also failed to make payment of the amount in question To the complainant after service of legal notice and therefore, the present complaint was filed under Section 138 of NI Act.

16. In these circumstances, this Court finds no reason to quash the impugned orders and the Complaint case, pending before the learned Trial Court என குறிப்பிட்டுள்ளது.

9.8). எனவே, வழக்கு காசோலை குறித்து எதிரியான எ.சா.1 அன்புகீதன் தனது குறுக்கு விசாரணையில், "**இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள காசோலை என்னுடையதுதான் என்றால், சரிதான். அந்த காசோலையில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான் என்றால், சரிதான்**" என சாட்சியம் அளித்துள்ளார். எனவே, இந்த வழக்கின் காசோலை எதிரியினுடைய காசோலை என்பதும், அந்த காசோலையில் உள்ள கையொப்பம் எதிரியினுடைய கையொப்பம் என்பதும் எதிரி தரப்பு குறுக்கு விசாரணையின் வாயிலாகவே புகார்தாரர் தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளது.

9.9). மேலும், வழக்கு காசோலையை புகார்தாரர் வசூலுக்கு தாக்கல் செய்தபோது

எதிரியின் வங்கிக் கணக்கில் போதிய பணம் இருந்ததா? என்பது குறித்து பரிசீலனை செய்கையில், எதிரி அன்புகீதன் தனது குறுக்கு விசாரணையில், "**காசோலைத் தொகையை திருப்பி செலுத்தும் அளவிற்கு எனது வங்கியில் பணம் இருந்தது என்பதை நிரூபிக்க வங்கியின் மேலாளரை விசாரிக்க தயாராக உள்ளேனா? என்றால், காசோலையில் குறிப்பிட்டுள்ள அளவிற்கு எனது வங்கிக் கணக்கில் பணம் இருக்க வாய்ப்பு இல்லை**" என சாட்சியம் அளித்துள்ளார். எனவே, காசோலை தொகையை திருப்பி செலுத்தும் அளவிற்கு எதிரியின் வங்கி கணக்கில் காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்த சமயத்தில் பணம் இல்லை என்ற விபரமும் எதிரியின் குறுக்கு விசாரணையின் வாயிலாகவே அறிய முடிகிறது.

9.10). எனவே, காசோலையில் உள்ள தொகை அளவிற்கு தனது வங்கிக் கணக்கில் பணம் இல்லாமல் மேற்படி காசோலையை கொடுத்துவிட்டு, காசோலையானது சிண்டிகேட் வங்கி கனரா வங்கியுடன் சேர்ந்து விட்டது என திருப்பப்பட்டதாலேயே மேற்படி காசோலை பணம் இல்லை என திருப்பப்படவில்லை என குறிப்பிடும் எதிரி தரப்பு வாதம் ஏற்புடையதல்ல என்று இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது. ஒருவேளை அந்த காசோலை வங்கியால் அனுமதிக்கப்பட்டிருந்தாலும், போதிய பணம் இல்லை என்றுதான் திரும்பியிருக்கும் எனக் குறிப்பிடும் புகார்தாரர் தரப்பு வாதம் ஏற்புடையது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

9.11). எனவே, வழக்கு காசோலை சட்டப்படியான கடனை தீர்ப்பதற்காக கொடுக்கப்பட்டதா? இல்லையா? என்பது மட்டுமே எதிரி தரப்பால் மறுத்துரைக்கப்பட வேண்டியது என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது.

9.12). எனவே, வழக்கு காசோலை சிண்டிகேட் வங்கியின் காசோலை என்பது தெரிந்தே, மேற்படி சிண்டிகேட் வங்கி 01.04.2020-ஆம் தேதி கனரா வங்கியுடன் இணைக்கப்பட்டிருந்தாலும்கூட, 30.06.2021-ஆம் தேதி வரை அவ்வாறு

இணைக்கப்பட்ட சிண்டிகேட் வங்கியின் காசோலை செல்லுபடி ஆகும் எனவும், 01.07.2021-ஆம் தேதி முதல் தான் அந்த சிண்டிகேட் வங்கியின் காசோலை செல்லுபடி ஆகாது என குறிப்பிடப்பட்டுள்ள நிலையில், மேற்படி செல்லுபடி ஆகாத காசோலையை 01.09.2021-ஆம் தேதி, அதாவது, மேற்படி காசோலை செல்லுபடி ஆகாது என்ற விபரம் அறிவிக்கப்பட்ட 2 மாதங்கள் கழித்து மேற்படி காசோலையை புகார்தாரர் வசம் எதிரி கொடுத்துள்ளார் என்பதை புகார்தாரரின் குறுக்கு விசாரணையில், "**01.09.2021-ஆம் தேதி எதிரி என்னிடம் காசோலையை கொடுத்ததாகச் சொல்கிறேன் என்றால், சரிதான்**" என சாட்சியம் அளித்துள்ளார். எனவே, புகார்தாரரின் குறுக்கு விசாரணையின் வாயிலாகவே அதனை அறிய முடிகிறது.

9.13). மேலும், எதிரி அன்புகீதன் தனது முதல் விசாரணையில், "**ஐயப்பன் என்ற நண்பர் ஒருவர் எனக்கு உள்ளார். அவரிடம் நான் ரூபாய் 4 லட்சம் பணம் வாங்கி இருந்தேன். அதற்காக அவரிடம் நான் காசோலை ஒன்று கையொப்பம் செய்து கொடுத்திருந்தேன். கொரோனா காலத்தில் அவருக்கு பணம் தேவைப்பட்டதால் என்னிடம் பணத்தை திரும்பக் கேட்டார். நான் பணத்தை கொடுத்து விட்டேன். சிறிது நாட்கள் கழித்து காசோலையை மீண்டும் கேட்டபோது, மேற்படி காசோலை எங்கோ தொலைந்து விட்டது எனச் சொன்னார்**" என சாட்சியம் அளித்துள்ளார்.

9.14). அதாவது, எதிரி அன்புகீதன் திருப்பூரில் உள்ள ஐயப்பன் என்பவரிடம் கடன் வாங்கி இருந்ததாகவும், அந்த பணத்தை திரும்பச் செலுத்தி விட்டதாகவும், ஐயப்பன் என்பவரிடம் வாங்கிய கடனுக்கு ஆதரவாகத்தான் இந்த வழக்கு காசோலை ஐயப்பன் என்பவருக்கு கொடுக்கப்பட்டது எனவும், இந்த எதிரிக்கு கொடுக்கப்படவில்லை எனவும் சாட்சியம் அளித்துள்ளார்.

9.15). மேலும், இது குறித்து எ.சா.1 அன்புகீதன் தனது குறுக்கு விசாரணையில், "**ஐயப்பன் என்பவரை இந்த வழக்கில் எனது தரப்பில் சாட்சியாக விசாரிக்க தயாராக**

உள்ளேனா என்றால், ஐயப்பன் என்பவர்தான் காசோலையை கொடுத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார், அவரை எப்படி எனது தரப்பு சாட்சியாக விசாரிக்க முடியும்?" என சாட்சியம் அளித்துள்ளார்.

9.16). அதாவது, ஐயப்பன் என்பவரிடம் கொடுத்த காசோலையை இந்த புகார்தாரரான லோகேந்திரன் என்பவரிடம் கொடுத்து ஐயப்பன் என்பவர்தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் எனவும், எனவே, அவரை அழைத்து வந்தாலும் தனக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்க மாட்டார் என்பதாக எ.சா.1 அன்புகீதன் தனது குறுக்கு விசாரணையில் சாட்சியம் அளித்துள்ளாரே தவிர, ஐயப்பன் என்பவரிடம்தான் கடன் வாங்கினார் என்பதற்கும், இந்த வழக்கு காசோலையை ஐயப்பன் என்பவரிடம்தான் கொடுத்தார் என்பதற்கும் எதிரி அன்புகீதன் தவிர வேறு எந்த சாட்சியும் முன்னிடாத நிலையில், வாங்கிய கடனை திரும்பச் செலுத்தக் கூடாது என்பதற்காக எவ்வித சாட்சியையும், சான்றாவணத்தையும் முன்னிடாமல் எதிரி புதுவிதமான காரணங்களைக் கூறுகிறார் எனக் குறிப்பிடும் புகார்தாரர் தரப்பு வாதம் ஏற்புடையது என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது.

9.17). மேலும், புகார்தாரர் லோகேந்திரன் தனது குறுக்கு விசாரணையில், "**இந்த வழக்கு காசோலை சம்பந்தமாக ஐயப்பனுக்கும் எதிரிக்கும் இடையே செட்டில்மெண்ட் பேசிக்கொள்ளப்பட்டது என்றால், இல்லை**" என சாட்சியம் அளித்துவிட்டு, பின்னர் "**ஐயப்பன் தன்னிடம் முழு பணத்தையும் செலுத்தும்படி எதிரியிடம் சொன்னார்**" என ஒப்புக்கொண்டு புகார்தாரர் லோகேந்திரன் தனது குறுக்கு விசாரணையில் சாட்சியம் அளித்துள்ளார். எனவே, இந்த வழக்கு காசோலைத் தொகை சம்பந்தமாக ஐயப்பன் என்பவருக்கும் எதிரிக்கும் இடையே பேச்சுவார்த்தை நடந்துள்ளது என்ற விபரம் முதலில் புகார்தாரால் மறுக்கப்பட்டிருந்தாலும்கூட, மேற்படி மறுக்கப்பட்ட விபரம் உண்மையல்ல என்பது அவரது குறுக்கு விசாரணையின் வாயிலாகவே எதிரி தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளது என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது.

9.18). இருப்பினும், இந்த புகார்தாரருக்கும் எதிரிக்கும் இடையே உள்ள வரவு, செலவிற்கு ஐயப்பன் என்பவர்தான் இந்த எதிரியை அறிமுகப்படுத்தினார் என்ற விபரத்தை புகார்தாரரின் குறுக்கு விசாரணையின் வாயிலாகவே அறிய முடிவதால், மேற்படி ஐயப்பன் என்பவர்தான் காசோலை தொகை குறித்து தங்களுக்குள் பேசினார் எனக் குறிப்பிடும் புகார்தாரர் தரப்பு வாதம் ஏற்புடையது என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது.

9.19). மேலும், புகார்தாரர் லோகேந்திரன் தனது குறுக்கு விசாரணையில், "**எதிரி, ஐயப்பனிடம் 50,000 பணம் தருகிறேன் லோகேந்திரனிடம் சொல்லி வாங்கிக் கொள்ளச் சொல்லுங்கள் என்று சொன்னார் என்றால், அவர் முழு பணத்தையும் கொடுக்கச் சொன்னார். ஐயப்பன் வந்து எதிரி தன்னிடம் பணத்தை கொடுத்து முடித்து விட்டதாகச் சொன்னால் வழக்கை வாபஸ் செய்து கொள்வேனா? என்றால், ஐயப்பன் வந்து என்னிடம் சொல்லட்டும்**" என சாட்சியம் அளித்துள்ளார்.

9.20). அதாவது, புகார்தாரர் லோகேந்திரன் தனது குறுக்கு விசாரணையில், தனக்கு எதிரி கொடுக்க வேண்டிய பணத்திற்கு ஐயப்பனிடம் ஏன் எதிரி பணம் கொடுக்க வேண்டும் எனச் சொல்லாமல், அவ்வாறு ஐயப்பனிடம் பணம் கொடுத்து விட்டால் இந்த வழக்கை வாபஸ் பெற்றுக் கொள்வேனா? என்றால், ஐயப்பன் வந்து என்னிடம் சொன்னால் வழக்கை வாபஸ் பெற்றுக் கொள்கிறேன் எனச் சொல்லியுள்ளார். எனவே, புகார்தாரர் லோகேந்திரன் என்பவருக்கு கொடுக்க வேண்டிய பணத்தை எதிரி ஐயப்பனிடம் கொடுத்து முடித்து விட்டதாகச் சொன்னால், தான் ஏன் வழக்கை வாபஸ் பெற்றுக் கொள்கிறேன் எனச் சொல்கிறார் என்றால், புகார்தாரர் லோகேந்திரன் என்பவரிடம் எதிரி கடன் பெறவில்லை என்பதால்தான் ஐயப்பனிடம் பணம் செலுத்தி விட்டதாக ஐயப்பன் வந்து தன்னிடம் சொன்னால், தான் வழக்கை வாபஸ் பெற்றுக் கொள்வதாக சொல்கிறார் எனவும், எனவே, உண்மையில் எதிரி

ஐயப்பன் என்பவருக்குதான் பணம் கொடுக்க வேண்டும் என்பதால்தான், ஐயப்பனிடம் பணம் கொடுத்ததாகச் சொல்லும் விபரத்தை ஐயப்பன் சொன்னால்தான் எதிரிக்கு எதிரான இந்த வழக்கை வாபஸ் பெற்றுக் கொள்வதாக தனது குறுக்கு விசாரணையில் சாட்சியம் அளித்துள்ளார் எனக் குறிப்பிடும் எதிரி தரப்பு வாதம் குறித்து பரிசீலனை செய்கையில்,

9.21). புகார்தாரர் லோகேந்திரன் தனது குறுக்கு விசாரணையில், "**ஐயப்பன் என்ற ஒருவர் மூலமாகத்தான் எதிரி எனக்கு பழக்கம். அவர் சொல்லித்தான் பணம் கொடுத்தேன்**" என சாட்சியம் அளித்துள்ளார். எனவே, ஐயப்பன் சொல்லித்தான் பணத்தை புகார்தாரர் கொடுத்துள்ளார் என்பதால்தான் ஐயப்பன் வந்து எதிரி பணத்தை திருப்பி கொடுத்து விட்டதாகச் சொன்னால், தான் வழக்கை வாபஸ் பெற்றுக் கொள்வதாக சொல்கிறார் எனக் குறிப்பிடும் புகார்தாரர் தரப்பு வாதம் ஏற்புடையது என்று இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

9.22). எதிரி, புகார்தாரரிடம் கடனாக ரூ.8,00,000/- பணத்தைப் பெற்றுக்கொண்டு, மேற்படி கடன் தொகைக்கு ஆதரவாக எதிரி கணக்கு வைத்துள்ள போடிநாயக்கனூர் கிளை, Syndicat Bank–ன் 425618 என்ற எண்ணுள்ள காசோலை ஒன்றை ரூ.8,00,000/- பணத்திற்கு 22.09.2021 என பின்தேதியிட்டு புகார்தாரரிடம் கொடுத்துள்ளதும், மேற்படி காசோலையைப் புகார்தாரரும் அவரது வங்கியில் 22.09.2021-ஆம் தேதி வசூலுக்குச் செலுத்தியபோது, எதிரியின் வங்கி கணக்கில் "BANK CD 025 EXC WEF 010721" (Bank Code 025 Excluded With Effect From 01.07.2021) என்ற காரணம் காட்டி 23.09.2021-ஆம் தேதி காசோலை திருப்பப்பட்டுள்ளதும், எதிரி தனது வங்கி கணக்கில் உள்ள காசோலைகள் வேறு வங்கி கணக்கில் இணைக்கப்பட்டுள்ள காரணத்தால் அந்த காசோலைகள் செல்லாது என்று தெரிந்தே புகார்தாரரை ஏமாற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் காசோலை கொடுத்து மோசடி செய்துள்ளதும் நிரூபணமாகிறது. எனவே, எதிரி மீதான மாற்றுமுறை ஆவணச் சட்டப்பிரிவு 138-ன் கீழான குற்றச்சாட்டு புகார்தாரர்

தரப்பில் இவ்வழக்கில் அனுமானிக்கப்பட்டுள்ளதாலும், மேலும், இவ்வழக்கு கடந்த 5 வருடங்களாக நிலுவையில் இருந்து வருவதாலும், அதனால் புகார்தாரருக்கு ஏற்பட்டுள்ள மன உளைச்சலுக்கு வழக்கு காசோலைத் தொகை கு.வி.மு.ச பிரிவு 357(3)-ன் கீழ் இழப்பீட்டுத் தொகையாக புகார்தாரருக்கு கிடைக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

9.23). புகார்தாரர் தரப்பில் முன்னிடப்பட்டுள்ள சாட்சிய, சான்றாவணங்களைப் பரிசீலித்த வகையில், எதிரி மீது சாட்டப்பட்டுள்ள மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138-ன் கீழான குற்றச்சாட்டு புகார்தாரர் தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதாக தீர்மானிக்கப்படுகிறது. எனவே, எதிரியை இந்நீதிமன்றம் குற்றவாளி என தீர்மானிக்கிறது.

10).**<u>தீர்வு</u>**:

10.1). முடிவாக, புகார்தாரர் ஆஜர். எதிரி ஆஜர். எதிரியை மாற்றுமுறை ஆவணச்சட்டம் பிரிவு 138-ன் கீழ் குற்றவாளி என தீர்மானித்து, எதிரிக்கு தண்டனையாக 1 வருடம் மெய்க்காவல் சிறை தண்டனை விதித்தும், எதிரியை கு.வி.மு.ச. பிரிவு 255(2)-ன் கீழ் இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. காசோலைத் தொகையான ரூ.8,00,000/-ஐ இழப்பீட்டுத் தொகையாக கு.வி.மு.ச பிரிவு 357(3)-ன் கீழ் எதிரி, புகார்தாரருக்கு இந்த தீர்ப்பு தேதியிலிருந்து 3 மாத காலத்திற்குள் செலுத்த வேண்டும் என உத்தரவிடப்படுகிறது. எதிரி இழப்பீட்டுத் தொகையை செலுத்தத் தவறினால் கு.வி.மு.ச பிரிவு 431 மற்றும் உ/இ பிரிவு 64 இ.த.ச-ன் படி எதிரிக்கு 1 மாத காலம் சிறை தண்டனை விதித்தும் தீர்ப்பளிக்கப்படுகிறது.

10.2). மேற்படி தண்டனை காலங்கள் முடிந்த பிறகும் எதிரி இழப்பீட்டுத் தொகையை செலுத்தத் தவறினால் கு.வி.மு.ச பிரிவு 421-ன் படி புகார்தாரர் நடவடிக்கை எடுக்க மனு தாக்கல் செய்து கொள்ளலாம் என உத்தரவிடப்படுகிறது.

CNR NO: TNTH13-004970-2021

10.3). இவ்வழக்கில் தடயப் பொருள் தாக்கல் இல்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, திறந்த நீதிமன்றத்தில் நீதிமன்ற இலட்சணையுடன் 2026 ஆகஸ்ட் திங்கள் 07-ஆம் நாளாகிய இன்று அவையறியப் பகரப்பட்டது.

NALLA KANNAN M
Digitally signed by NALLA KANNAN M
Date: 2026.08.07 18:09:23 +0530

நீதித்துறை நடுவர்,
போடிநாயக்கனூர்.

<u>1). புகார்தாரர் தரப்பு சாட்சிகளின் பட்டியல்</u>:

1.	ம.சா.1	திரு.லோகேந்திரன்	புகார்தாரர்

<u>2). புகார்தாரர் தரப்பு சான்றாவணங்களின் பட்டியல்</u>:

1.	ம.சா.ஆ.1	22.09.2021-ஆம் தேதியிட்ட Syndicate வங்கி, போடிநாயக்கனூர் கிளை, ரூபாய் 8 லட்சத்திற்கான காசோலை எண்.425618 அசல்.	ம.சா.1
2.	ம.சா.ஆ.2	23.09.2021-ஆம் தேதியிட்ட கரூர் வைசியா பேங்க், போடிநாயக்கனூர் கிளையின் காசோலை BANK CD 025 EXC WEF010721 என்ற குறிப்புடன் திருப்பப்பட்டதற்கான குறிப்பாணை அசல்.	ம.சா.1
3.	ம.சா.ஆ.3	01.10.2021-ஆம் தேதியிட்ட அசல் அஞ்சல் ரசீதுடன் கூடிய சட்ட அறிவிப்பு அலுவலக நகல்.	ம.சா.1
4.	ம.சா.ஆ.4	04.10.2021-ஆம் தேதியில் எதிரி சட்ட அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அசல் அஞ்சல் ஒப்புதல் அட்டை எண்ணிக்கை - 2.	ம.சா.1
5.	ம.சா.ஆ.5	07.10.2021-ஆம் தேதியிட்ட எதிரி புகார்தாரருக்கு அனுப்பிய பதில் வழக்கறிஞர் அறிவிப்பு அசல்.	ம.சா.1

<u>3). புகார்தாரர் தரப்பு சான்றுப்பொருள்களின் பட்டியல்</u>: தாக்கல் இல்லை.

<u>4). எதிரி தரப்பு சாட்சிகளின் பட்டியல்</u>:

1.	எ.சா.1	திரு.அன்புகீதன்	எதிரி

<u>5). எதிரி தரப்பு சான்றாவணங்கள் மற்றும் சான்றுப்பொருட்களின் பட்டியல்</u>: தாக்கல் இல்லை.

NALLA KANNAN M
Digitally signed by NALLA KANNAN M
Date: 2026.08.07 18:09:28 +0530

நீதித்துறை நடுவர்,

போடிநாயக்கனூர்.